

ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாட்டை வஞ்சித்த ஒன்றிய பாஜக அரசைக் கண்டித்தும், அதற்கு துணை போகும் அ.இ.அ.தி.மு.க.வை கண்டித்தும் புதுக்கோட்டையில் தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் சார்பில் புதுக்கோட்டை அண்ணா சிலை அருகில் புதுக்கோட்டை வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் தலைமையில் மாகபரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் வை.முத்துராஜா, மேயர் திலகவதி செந்தில், துணை மேயர் எம். லியாகத் அலி, வே.ராஜேஸ், பெனட் அந்தோணி ராஜ் எஸ்.சங்கர், த.செங்கோடன், எஸ்.கே.கலியமூர்த்தி, சுசீலா கணேசன், முகமது கனி, அஸ்ரப்அலி, அப்துல் கனி , மு.அறிவொளி, ஜெய்.பார்த்திபன், அப்துல் ஜாபர், தி.மு.க. சார்பில் என்.சாத்தையா, அ.ரெத்தினம், செந்தாமரை பாலு, கவிவேந்தன், சி.அரங்கநாயகம் உள்ளிட்டோர் கண்டன உரையாற்றினார். ஆர்ப்பாட்டத்தில் ஆண்கள், பெண்கள் உள்ளிட்ட நூற்றுக் கணக்கான கூட்டணி கட்சியினர் கலந்துகொண்டனர்.




தருமபுரி மேற்கு மாவட்டச் செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன் ஆலோசனைப்படி காரிமங்கலம் மேற்கு ஒன்றிய கழக செயலாளர் எம்வீடி.கோபால் தலைமையில் ஒன்றிய பா.ஜ.க. அரசை கண்டித்து வெள்ளிச்சந்தையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்பாட்டத்தில் பாலக்கோடு தொகுதி பார்வையாளர் டி.எம்.அரியப்பன், மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் டி. சந்திரசேகரன் மற்றும் ஹரிபிரசாத், ஏ. வி.குமார், ஜேஎம். சக்தி, பழனிமுத்து, முருகேசன், வினோத்குமார், சுமதி, கோவிந்தன், ராஜாமணி, சுந்தரம், கன்னியப்பன், கூட்டணி கட்சியினர்,1000 க்கும் மேற்பட்ட பெண்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

### மகளிர் உரிமைத் தொகை முன்கூட்டியே வழங்கியதோடு

# உயர்த்தப்படும் என்ற அறிவிப்பை வெளியிட்ட தாயுள்ளம் கொண்ட தமிழ்நாடு முதல்வர் நீடூழி வாழ்க!

## தொ.மு.ச. பேரவைப் பொதுச்செயலாளர் மு.சண்முகம் அறிக்கை!

சென்னை, பிப்.15-

தமிழக மக்கள் 2021-ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் பெருவாரியாக வாக்களித்து தமிழகத்தின் முதல்வராக முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களை ஆட்சிக் கட்டிலில் அமர வைத்தார்கள்.

தமிழக மக்களின் நம்பிக்கைக்குரிய முதல்வராக அவர் பொறுப்பேற்றபோது, 2-ஆம் கட்ட கொரோனாவால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு, வாழ்வாதாரத்தை இழந்த நிலையில் இருந்தார்கள். பதவியேற்ற முதல்வர் அவர்கள் கொரோனாவால் பாதிக்கப் பட்டவர்களுக்கு தகுந்த மருத்துவ சிகிச்சைகள் அளித்ததோடு மட்டுமல்லாமல், வாழ்வாதாரத்தை இழந்து தவிக்கும் மக்களின் துயர் துடைக்க ரூபாய் 4,000 நிவாரணத் தொகையும் வழங்கினார்.

கழகத் தேர்தல் அறிக்கையில் அறிவித்த வாக்குறுதிகளில் ஒன்றான அரசுப் பேருந்துகளில் மகளிருக்கு கட்டணமில்லாமல் பயணம் செய்வதற்கு தான் முதல் கையொப்பமிட்டார். இதன் மூலம் மகளிர் இன்று பெரிய அளவில் பயனடைந்ததோடு, சேமிக்கும் நிலையை உருவாக்கித் தந்தார்கள். இந்த திட்டத்தை மற்ற மாநிலங்களிலும் பின்பற்றி செயல்படுத்தி வருகிறது.

கழகம் ஆட்சிக்கு வந்தால் பெண்களுக்கு ரூ.1,000/ மாதந்தோறும் வழங்கப்படுமென அறிவித்து 2023 செப்டம்பர் மாதம் முதல் ஒவ்வொரு மகளிருக்கும் உரிமைத் தொகைமாதம் ரூ.1,000/ வழங்கி இன்று 1 கோடியே 31 லட்சம் குடும்பத் தலைவிகள் பயன்பெற்று வருகிறார்கள். மகளிர் வாழ்க்கைக்கு உதவிடும் இது ஒரு புரட்சிகரமான திட்டம்.



தமிழக முதல்வர் அவர்கள் பல்வேறு திட்டங்களை தமது ஆட்சிக் காலத்தில் நிறைவேற்றி வருகிறார். கடுமையான நிதி பற்றாக்குறை இருந்தபோதிலும் நான் முதல்வன், புதுமைப் பெண் மற்றும் தமிழ்ப் புதல்வன், பள்ளிகளில் மாணவர்களின் மதிய உணவுடன் காலை உணவுத் திட்டம், மக்களைத் தேடி மருத்துவத் திட்டம், முதியோர் நியாய விலைக்கடைக்கு செல்லாமல் வீடு தேடி உணவுப் பொருட்கள் வழங்கும் தாயுமானவர் திட்டம் போன்ற பல திட்டங்களைக் கொண்டு வந்து தமிழகத்தை அனைத்து துறையிலும் முதன்மை மாநிலமாக நிலை நிறுத்தியுள்ளார்.

ஒன்றிய அரசாங்கம் நியாயமாக தமிழ்நாட்டிற்கு தர வேண்டிய நிதிகளையெல்லாம் தர மறுத்து தமிழ்நாடு அரசுக்கு நிதி நெருக்கடிகளை உண்டாக்கி ஒரு அவப்பெயரை உண்டாக்கும் செயலை செய்து கொண்டிருக்கிறது. மகளிர் உரிமைத் தொகை திட்டத்தை சீர்குலைக்க பா.ஜ.க. மற்றும் அ.தி.மு.க. முயன்று வரும் செய்தி அடிப்படையில் முதல்வர் அவர்கள் காணொலி செய்தி வெளியிட்டார்கள். அதில் மகளிருக்கு கொடுக்கும் உரிமைத் தொகையை மேம்படுத்துவதற்காக நாம் செயல்பட்டு வரும் நிலையில் “டெல்லியில் இருக்கும் ஒரு கூட்டமும், தமிழ்நாட்டில் அவர்களுக்கு அடிமையாக இருக்கும் ஒரு கூட்டமும்” எதிர்வரும் சட்டமன்றத் தேர்தலை காரணங்காட்டி அடுத்த 3 மாதத்திற்கு மகளிர் உரிமைத் தொகையை நிறுத்தவும், இதுகுறித்து நீதிமன்றத்தில் வழக்கு தொடரவும் சூழ்ச்சி செய்வதாக செய்திகள் வருகின்றன” என தெரிவித்தார். 1 கோடியே 31 லட்சம் மகளிர் பாதிப்படையும் நிலை உள்ளதால் நம்மில் ஒருவரான முதல்வர் மகளிர் உரிமைத் தொகை பிப்ரவரி மாதம் மட்டுமல்லாமல், அடுத்த 2 மாதங்கள் மார்ச், ஏப்ரல் மாதத்திற்கான தவணைகளைச் சேர்த்து ரூ.3000ம், கூடுதலாக கோடைக்கால தொகுப்புத் தொகை என மேலும் ரூ.2000 சிறப்புத் தொகையும் சேர்த்து 13.02.2026 அன்று ரூ. 5,000த்தை அவர்களுடைய வங்கிக் கணக்கிற்கு சென்றடைய உத்தரவிட்டுள்ளார்.

2026-ஆம் ஆண்டு பிறந்ததும், தமிழ் திருநாளாம் பொங்கல் திருநாளில் சிறப்பாக கொண்டாடுவதற்கு 2 கோடியே 23 லட்சம் குடும்பங்களுக்கு ரூ.3000 வழங்கி அத்துடன் பொங்கல் வைப்பதற்கான பொருட்களையும் தந்து நம்மை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தியுள்ளார்கள்.

மக்களின் நலன் காக்கும் தமிழக முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை மற்றும் சிறப்பு தொகுப்பு தொகை என ரூ.5000 வழங்கியதோடு, திராவிட மாடல் 2.0 ஆட்சி அமைந்தால் மகளிர் உரிமைத் தொகை ரூ.2000மாக உயர்த்தப்படும் என்ற அறிவிப்பு மூலம் அமைப்புசாரா தொழிலில் உள்ள மகளிர், நடைபாதை வியாபாரத்தில் உள்ள மகளிர் என உழைக்கும் பெண்கள் வாழ்வை முன்னேற்றம் அடைய செய்யும் முதல்வரின் அறிவிப்பை கோடான கோடி தமிழ்நாட்டு தொழிலாளர்களின் சார்பாக நன்றியை தெரிவிப்பதோடு, மீண்டும் கழக ஆட்சி அமைய தொழிலாளர் வர்க்கம் நம் உயிர் நிகர் தலைவரை இரண்டாம் முறை ஆட்சிக் கட்டிலில் அமர வைக்க அயராது களப்பணியாற்றுவோம்.

தாயுள்ளம் கொண்ட மக்களின் முதல்வர் தளபதி அவர்கள் நீடூழி வாழ்க என தொழிலாளர்கள் சார்பில் வாழ்த்துகிறேன்.


வெல்வோம் 200 படைப்போம் வரலாறு.

இவ்வாறு மு.சண்முகம் தெரிவித்துள்ளார்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின்

# எளிய மக்களின் மனங்களில் இடம்பிடித்த மாபெரும் தலைவர்!

## எழுத்தாளர் அழகிய பெரியவன் முகநூலில் பதிவு!



சென்னை, பிப்.15-

எளிய மக்களின் மனங்களில் இடம் பிடித்த மாபெரும் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் என்று எழுத்தாளர் அழகிய பெரியவன் தனது முகநூல் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

அவரது பதிவு வருமாறு:-

இந்த ஆட்சி எப்படி இருக்கிறது என்று கிராமப்புறத்தில் இருக்கும் ஒரு வயதான அம்மாவிடம் கேட்டேன்.

“மாசம் பதினஞ்சி ஆனா டான்னு ஆயிற்ரூபா கணக்குல வந்து உளுந்துட்து எப்பா. வேற என்னா ஒணும்? அந்தப்பன் நல்லா இருக்கணும்” என்றார் அவர்.

இன்று காலையில் (13.02.2026) அவரிடம் விசாரித்திருந்தால், தன்னுடைய கணக்கில் ஐந்தாயிரம் ரூபாய் வரவு வைக்கப்பட்டதைச் சொல்லி நெகிழ்ச்சியில் கண்கலங்கி இருப்பார்.

எளிய மக்களின் மனங்களில் இடம் பிடிப்பவர்களே மாபெரும் தலைவர்கள். அந்த வகையில் தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள் எளிய மக்களின் மனங்களில் இடம் பிடித்துவிட்ட மாபெரும் தலைவர். இதில் சிறிதும் மிகையில்லை.

ஓர் அரசின் சட்டங்களும், திட்டங்களும் தொழிலதிபர்களுக்கு வரி சலுகைகளாகவும், அரசு ஊழியர்களுக்கு சம்பளம் மற்றும் பணப் பலன்களாகவும், நிலவுடைமையாளர்களுக்கு மானியங்களாகவும் என பல வகைகளில் சென்று சேர்க்கின்றன. ஆனால் எளிய உழைக்கும் மக்களுக்கோ நலத்திட்டங்கள் என்ற வடிவத்தில் தான் சென்று சேர்க்கின்றன.

ஓர் அரசு இயங்குகிறது, அது தன்னை குறித்து அக்கறை கொள்கிறது என்பதை நலத்திட்டங்களின் வழியாகத்தான் எளிய மக்கள் உணர்ந்து கொள்கிறார்கள். இது ஒரு மனிதரை நேரடியாக அரவணைப்பதை போன்றது. வெறுப்பிலும், வன்மத்திலும் இருக்கிறவர்களுக்கும், செழிப்பில் மிதக்கிறவர்களுக்கும், சமூக விழிப்புணர்வும், மானுட அக்கறையும் இல்லாதவர்களுக்கும் இது புரியவே புரியாது.

ஆனால் எளிய மக்களோ முதல்வரை, நதி மணலின் எண்ணிக்கையைப் போலவும், கழனி விளையும் நெல் மணிகளின் எண்ணிக்கையைப் போலவும் வாழ்க

(“புல் இலை வஞ்சிப் புறமதில்
அலைக்கும் கல்லென்
பொருநை மணலினும்,
ஆங்கண் பல் ஊர் சுற்றிய கழனி
எல்லாம் விளையும் நெல்லினும்
(வாழிய) பலவே”) என்று வாழ்த்துவர்.

இவ்வாறு அவர் தனது பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

### அரியலூர் சட்டமன்றத் தொகுதி சார்பில்

# “தமிழ்நாடு தலைகுனியாது” சட்டமன்றத் தொகுதி பரப்புரை பொதுக்கூட்டம்!

## முனைவர்.சபாபதி மோகன் - அமைச்சர் சா.சி.சிவசங்கர் பங்கேற்பு!

அரியலூர்,பிப்.15-

அரியலூர் சட்டமன்ற தொகுதி சார்பில் “தமிழ்நாடு தலைகுனியாது” பரப்புரை பொதுக்கூட்டம் கழகத் தலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின்படி, கழக இளம் தலைவர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி (13.02.2026) அன்று திருமானூர் ஒன்றியம், சாத்தமங்கலம் தலைவர் கலைஞர் திடலில்

திருமானூர் மத்திய ஒன்றிய கழகப் பொறுப்பாளர் இரா. கென்னடி தலைமையில் நடைபெற்றது, அரியலூர் வடக்கு ஒன்றிய கழக பொறுப்பாளர் கோ.அறிவழகன் வரவேற்புரை நிகழ்த்தினார், நகர கழக செயலாளர் இரா. முருகேசன், ஒன்றிய கழக பொறுப்பாளர்கள் இரா.அண்ணாதுரை, மா.அன்பழகன், ரே. அசோகச் சக்கரவர்த்தி, தெய்வ.இளையராஜா, கே. ஜி.எஸ். முருகன், மாவட்ட துணை செயலாளர் சி. சந்திரசேகரன், லதா. பாலு, பொதுக்குழு உறுப்பினர்கள் இரா, பாலு, வி.எம். ஷாஜகான், ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நடைபெற்ற கூட்டத்தில் கழக கொள்கை பரப்புச் செயலாளர், முனைவர் இரா.சபாபதி மோகன், தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

இக்கூட்டத்தில் ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க. சொ.க.கண்ணன், அரியலூர் சட்டமன்ற தொகுதி மேற்பார்வையாளர் ப.அன்பரசு, அரியலூர் நகர் மன்ற தலைவர் சாந்தி கலைவாணன், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள்

கே.சி.லூயிகதிரவன், கருப்புசாமி, ரவிக்குமார் வை.முருகானந்தம், ஜெயக்குமார், இரா.குலோத்துங்கன் அருண்ராஜா, ஜோ. வின்செண்ட் ராஜா, மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் எஸ்.ஆர். முருகேசன், வீரசிவா, தர்மராஜ், மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் செல்வ.பிரபாகரன், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் இலக்கிய தாசன் மற்றும் மாநில, மாவட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள்,கழக தோழர்கள் பெருந்திரளாக கலந்து கொண்டனர். இறுதியாக தா.பழூர் ஒன்றிய பொறுப்பாளர் ப.தனவேல் நன்றி கூறினார்.



தமிழ்நாட்டில் 1.31 கோடி இல்லத்தரசிகளுக்கு பிப்ரவரி, மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களுக்கான உரிமைத் தொகை மற்றும் கோடைக்கால சிறப்புத் தொகுப்பு என மொத்தமாக ரூ. 5000/ வழங்கிய கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் முக.க.ஸ்டாலின் அவர்களுக்கு, கரூர் மாவட்ட மக்களின் சார்பாகவும், கரூர் மாவட்ட கழகத்தின் சார்பாகவும் கோடான கோடி நன்றிகளை சமர்ப்பித்து, கரூர் பழைய பேருந்து நிலையம் அருகில், பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கி கொண்டாடப்பட்டது.



திருச்சியில் மத்திய மாவட்டம் சார்பில் ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாட்டிற்கு நிதி ஒதுக்காத ஒன்றிய பா.ஜ.க. அரசையும் அதற்கு ஆதரவாக செயல்படும் அ.தி.மு.க.வையும் கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் தபால் நிலையம் அருகே மத்திய மாவட்டச் செயலாளர் வைரமணி தலைமையில் மாநகர செயலாளர் அன்பழகன் முன்னிலையில் நடைபெற்றது. கண்டன ஆர்ப்பாட்டத்தில் கழக நிர்வாகிகள், பகுதி செயலாளர் வட்ட செயலாளர்கள் கவுன்சிலர்கள் உட்பட கூட்டணி கட்சித் தோழர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்




தருமபுரி நகரம் வள்ளலார் திடலில் தருமபுரி தி.மு.க. கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் வழக்கறிஞர்.ஆ.மணி எம்.பி.தலைமையில் நடைபெற்ற “தமிழ்நாடு தலைகுனியாது” மாபெரும் பொதுக்கூட்டத்தில் தி.மு.க. கொள்கை பரப்புச் செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ. எழுச்சியுரை ஆற்றினார்.கூட்டத்தில் முன்னாள் மாவட்ட செயலாளர்கள் தடங்கம்.சுப்ரமணி, பி.என்.பி.இன்பசேகரன் ,தருமச்செல்வன்,தருமபுரி தொகுதி பார்வையாளர் டி.செங்குட்டுவன்,நகர செயலாளர்கள் நாட்டான்.மாது,எம்.பி.கௌதம்,முல்லை ரவி,மற்றும் மாநில,மாவட்ட,ஒன்றிய,பேரூர் கழகத்தினர்,ஏராளமான பெண்கள் உள்ளிட்ட 1000 க்கும் மேற்பட்ட பொதுமக்கள் பங்கேற்றனர்.